TAMILNADU STATE BRANCH

2nd Floor, 12-D, Palaniappa Street,
Opp. Federal Bank, Perundurai Road, Erode - 638 009.
Ph : 0424 - 2226660,
Mobile : 75981 82774, 75981 92774
E-mail : imatamilnadu@yahoo.co.in,
www.imatn.com

(மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு)



Dr. M. Balasubramanian
State President
IMA TNSB



Dr. C.N. Raja
Hony. State Secretary
IMA TNSB



Dr. V. Madhavan
State Finance Secretary
IMA TNSB

அமைப்பு

தமிழ்நாடு கிளை.

# சாலை விபத்துகளில் உயிர் காக்கும் முதல் உதவி

# (Pre Hospital Trauma Care)

ஐக்கிய நாட்டு சபையில் உலக சுகாதார அமைப்பின் ஆய்வு இந்த நூற்றாண்டின் உயிர் இழப்பின் எண்ணிக்கையில் பெரும்பகுதி சாலை விபத்தின் காரணமாகத்தான் இருக்கும் என தெரிவிக்கிறது. இது இந்த பிரச்சனையின் பூதாகார தன்மையை காட்டுகிறது. உலகில் உள்ள மோட்டார் வாகனங்களில் 1 விழுக்காடுதான் இந்தியாவில் உள்ளது. ஆனால் உலக சாலை விபத்துகளில் 10 சதவீதம் இந்தியாவில் ஏற்படுகின்றது. ஒவ்வொரு உயிர் இழப்பு ஏற்படும் போது சுமார் 30-லிருந்து 40 பேர் சிறு காயம் அடைகின்றனர். 10-லிருந்து 15-பேர் பலத்த காயம் அடைந்து நீண்ட நாள் மருத்துவமனையில் இருக்கின்றனர். இதில்

பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் 15-லிருந்து 45 வயதிற்கு உட்பட்டவர்களே.

இந்திய மருத்துவ சங்கம், ஊர்க்காவல்படை, போக்குவரத்து காப்பாளர் குழுமம் போன்ற தன்னார்வ இயக்கங்கள் நடத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், சாலை பாதுகாப்பு கண்காணிப்புகுழு, நல்ல சாலைகள், போக்குவரத்து விதிகளை கடுமையாக அமுல்படுத்துதல் பொதுமக்கள் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுதல் போன்றவைகளே இந்த சாலை விபத்து இறப்புக்களை கணிசமான அளவு குறைக்க முடியும். இந்தியாவின் வேகமான வளர்ச்சி ஒருபுறம், சாலை பாதுகாப்பு குறித்து அக்கறையின்மை மறுபுறம் அதிக விபத்துக்களை ஏற்படுத்தும். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் 1,25,000 பேர் சாலை விபத்தில் இறக்கின்றனர். சுனாமியை விட, பூஜ் பூகம்பத்தைவிட, போபால்



விஷவாயுவை விட, பயங்கரவாதிகள் செயல்களால் ஏற்படும் உயிரிழப்புகளை விட இது மிகவும் அதிகமானது. எனினும் நாம் சாலை பாதுகாப்பிற்காக செலவிடும் நேரமும், பணமும், சக்தியும் மிகவும் குறைவு. தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்களில் 16,000 பேர் இறக்கின்றார்கள். எனவேதான் சாலை பாதுகாப்பு என்பது மிக மிக அவசியமான ஒன்றாகிறது. பெரும் அளவில் வாகன மற்றும் சாலை அமைப்பில் செய்யப்படும் முன்னேற்ற நடவடிக்கைகளே இந்த பிரச்சனையில் ஓர் தீர்வாகி சாலை விபத்து மற்றும் மரணங்களை குறைக்கும்.

சென்னை ஐ.ஐ.டி-யின் போக்குவரத்து பொறியியல் துறையின் பேராசிரியர் திரு.வீரராகவன், திரு.மூ.முத்தையன் அறக்கட்டளையின் சாலை விபத்து சொற்பொழிவிலே சொல்கின்றார். “ சாலை

விபத்துக்களில் 83 விழுக்காடு நடந்து செல்பவர்கள், மிதிவண்டி மற்றும் இரு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்கள் தொடர்புடையன. எனவே இவர்களை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளப்படும் சாலை அமைப்பு மற்றும் திட்டங்கள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஆனால் கண்டிப்பான முறையில், தீவிரமான முறையில் சட்டங்களை அமுல்படுத்துவது மூலமாக வேண்டுமானால் சற்று மாற்றம் கொண்டு வரலாம். சாலை விபத்துகளினால் ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் 70,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இது இந்தியாவின் புனூ-யில் 2 விழுக்காடு ஆகும். வாகனங்களுக்கு ஏற்படும் இழப்பு 10,000 கோடியாகவும், காப்பீட்டின் மூலம் செலுத்தப்படும் தொகை 40,000 கோடியாகவும் உள்ளது. சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்களினால் 16,000-க்கும் அதிக



மானவர்கள் இறக்கின்றனர். பொதுமக்கள் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றும் செயல்முறைகளில் மாறுவார்கள் எனில் இந்த எண்ணிக்கை குறைய வாய்ப்புண்டு. ஆகவே அவர்களுக்கு அடிப்படை உயிர்காக்கும் பயிற்சி முறையை நாம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

108 ஆம்புலன்ஸ் விபத்துக்கு உள்ளானவர்களை கோல்டன் 1 மணி நேரத்தில் அழைத்து சென்றாலும், அது வந்து சேர்வதற்குள் முதல் பிளாட்டினம் 10 நிமிடங்களில் அளிக்கப்படும் முதல் உதவி பெருவாரியான உயிர்களைக் காக்கும்.

இந்திய மருத்துவ சங்கம், தமிழ்நாடு கிளை தனது சமுதாய பணியாக, சாலை பாதுகாப்பு வாரம் (ஜனவரி 1 - 7) சமயத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைமை யிடங்களில் காவல் துறையினர், தீயணைப்பு துறையினர், ஊர்க்காவல் படையினர்

ஆகியோருக்கு சாலை விபத்துக்களில் உயிர்காக்கும் முதலுதவி பயிற்சி அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

## The Important things in saving the Trauma Victims

- To Maintain the Airway
- To Stop the bleeding
- To Diagnose & Splint the Fractures



**முக்கியமன விபத்து முதலுதவி அம்சங்கள்**

- மூச்சுத்திணறலை கண்டறிந்து அதனை சீர்செய்தல்
- இரத்தப் போக்கை நிறுத்துதல்
- எலும்பு முறிவை கண்டறிந்து அதனை அசையாது வைத்திருத்தல்



## To Maintain the Airway/ மூச்சுத் திணறலை கண்டறிந்து அதனை சீர்செய்தல்





- வாய்ப்பகுதியை திறந்து ஆக்ஸிஜன் அதிகமாக கிடைக்கும்படி செய்யவேண்டும்.
- வாய் மற்றும் மூக்குப் பகுதியில் ஏதேனும் இரத்தக்கட்டு மற்றும் உடைந்த பற்கள் அல்லது வேறு பொருட்கள் உள்ளதா என்று பார்த்து அதனை எடுத்து மூச்சு திணறலை சரி செய்ய வேண்டும்.
- நெஞ்சு பகுதி சீரான முறையில் ஏறி இறங்குகிறதா என்று பார்க்கவேண்டும்.

## To Stop the bleeding / இரத்தப் போக்கை நிறுத்துதல்

❖ ஈரத்துணியை எடுத்து இரத்தம் வரும் காயத்தில் அழுத்தி கட்ட வேண்டும்.

❖ கைப்பகுதியிலோ அல்லது கால் பகுதியிலோ இரத்தம் காயம் ஏற்பட்டால் அதனை உயர்த்தி பிடித்திட வேண்டும்.





## To Diagnose & Splint the Fractures/எலும்பு முறிவை கண்டறிந்து அதனை அசையாது வைத்திருத்தல்

❖ எலும்பு முறிவு ஏற்பட்ட பகுதி வீக்கமாக இருக்கும். கோணலாக இருக்கும் அசைக்கும் பொழுது அதிகமான வலி ஏற்படும்.



❖ உடையாத காலோடு இணைத்து கட்டலாம் அல்லது மரப்பலகை கொண்டு உடைந்த காலை இணைத்து கட்டலாம்.





## Head Injury / தலை மற்றும் மூளையில் அடிபடுதல் – முதலுதவி

❖ முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரத்தச் சேதத்தை குறைக்க வேண்டும்.





## Spine Injury / கழுத்து எலும்பு மற்றும் தண்டுவடம் பாதிக்கப்படுதல்

❖ கை மற்றும் காலானது இயங்க முடியாமல் போய்விடும். இதற்கு கழுத்து

பகுதியை அசைக்காதவாறு மூன்று பேர்கள் சேர்ந்து அவரை தூக்கி ஆம்புலன்ஸில் வைக்க வேண்டும்.






## Chest Injury / நெஞ்சுப் பகுதியில் அடிபடுதல்

❖ முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖ இரத்தச் சேதத்தை குறைக்க வேண்டும்.

❖ ஒருவர் மேல் சரித்து வைத்து மருத்துவமனைக்கு அழைத்து வர வேண்டும்.








## Information to be collected from the Trauma Victims விபத்து நோயாளிகளிடம் சேகரிக்க வேண்டிய தகவல்கள் (முடிந்தளவிற்கு)

❖ நோயாளியின் பெயர் மற்றும் யாருக்கு தகவல் சொல்லப்பட வேண்டும் என்பவரின் செல் நம்பர்.

❖ நோயாளியின் இரத்த வகுப்பு.

❖ நோயாளிக்கு சர்க்கரை வியாதி, இருதய வியாதி மற்றும் இதர வியாதிகள் விபரங்கள் அவருக்கு ஒத்துக்கொள்ளாத மருந்துகளின் விபரங்கள்.

## Burns/ தீக்காயம்

❖ தண்ணீரை தீக்காயம் பட்ட இடத்தில் அதிகமாக ஊற்றவேண்டும்.




❖ ஈரக்கம்பளத்தை எடுத்து அவர் மேல்சுற்றி மருத்துவமனைக்கு கொண்டு வர வேண்டும்.

## Electric Shock / மின்சாரம் தாக்குதல்

❖ மரத்துண்டை எடுத்து அவர் மேல் எறிந்து அவர் பிடித்துக் கொண்டிருக்கும் மின்சாரத்துடன் உண்டான இணைப்பை துண்டிக்க வேண்டும்.



❖ முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## Cardio Pulmonary Resuscitation/ நின்ற இருதயத்தை இயக்குதல் மற்றும் மூச்சுத்திணறலை சீரமைத்தல்



❖ இரு நபர்கள் / இருதயத்தை அழுத்துதல் மற்றும் செயற்கை சுவாசம் கொடுத்தல்.



## Don'ts in First Aid/விபத்து முதலுதவியில் செய்யக்கூடாதவை

❖ இரத்தக்காயத்தில் மஞ்சள்பொடி, காப்பிப்பொடி மற்றும் இதரப்பொருட்களை வைக்கக்கூடாது.

❖ இரத்தக்காயம் ஏற்பட்ட பகுதிக்கு மேலாக கையிலோ, காலிலோ இறுக்கி கட்டுப்போடக்கூடாது.

❖ நெஞ்சு மற்றும் வயிற்றுப்பகுதியில் அடிப்பட்ட நபர்களுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடாது. வேண்டுமானால் உதடுகள் நனையும் அளவிற்கு கொடுக்கலாம்.

## Hand Injury/ கை சேதம் அடைதல்

- ஈரத்துணியை எடுத்து இரத்தம் வரும் காயத்தில் அழுத்தி கட்ட வேண்டும்.
- கைப்பகுதியை உயர்த்தி பிடித்திட வேண்டும்.
- கை துண்டிக்கப்பட்டால் அதனை ஒட்ட வைப்பதற்கு உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு வர வேண்டும். அதனை பாலித்தீன் பையில் வைத்து கட்டிய பின் ஐஸ்கட்டியில் வைத்து கொண்டு வர வேண்டும்.





## Skeletal Injury/ கை, கால்களில் எலும்பு முறிதல்

- முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள





வேண்டும். இரத்தச் சேதத்தை குறைக்க வேண்டும்.

- எலும்பு முறிவு ஏற்பட்ட பகுதி வீக்கமாக இருக்கும். கோணலாக இருக்கும் அசைக்கும் பொழுது அதிகமான வலி ஏற்படும்.
- உடையாத காலோடு இணைத்து கட்டலாம், அல்லது மரப்பலகை கொண்டு உடைந்த காலை இணைத்து மருத்துவமனைக்குக் கொண்டு வர வேண்டும்.

## Soft Tissue Injury/ கை கால்களில் சதை சேதம் அடைதல்

- முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இரத்தச் சேதத்தை குறைக்க வேண்டும்.

❖ ஈரத்துணியை எடுத்து இரத்தம் வரும் காயத்தில் அழுத்தி கட்ட வேண்டும். கைப்பகுதியிலோ அல்லது கால்பகுதியிலோ இரத்தம் காயம் ஏற்பட்டால் அதனை உயர்த்தி பிடித்திட வேண்டும்.





## Convulsions/வெட்டு/காக்காய் வலிப்பு



❖ முக்கியமாக மூச்சுத்திணறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

❖ இரத்தச் சேதத்தை குறைக்க வேண்டும்.



❖ தலைப்பகுதியை ஒரு பக்கமாக சாய்த்து வைக்க வேண்டும். வாய்ப்பகுதியை திறந்து ஆக்ஸிஜன் அதிகமாக கிடைக்கும் படி செய்ய வேண்டும்.



## மத்திய அரசின் சாலை போக்குவரத்து துறையின் எழு தங்கமயமான விதிகள்

1. எப்போதும் தலைகவசம் மற்றும் இருக்கை பெல்ட் அணியுங்கள்.
2. சாலை குறியீடுகளை தெரிந்து கொள்ளவும், அவைகளுக்கு கீழ்படியுங்கள்.
3. தாறுமாறாக வாகனங்களை ஓட்டாதீர், அனுசரணையான மற்றவர்களை மதிக்கும் ஓட்டுநராக இருங்கள்.
4. நடப்பவர்களுக்கும், சாலையை கடப்பவர்களுக்கும் முன்னுரிமை கொடுங்கள்.
5. குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டாதீர்கள்.
6. வேக அளவுகளை மீறாதீர்கள்.
7. சாலையை கடக்கும்போதோ, வாகனங்களை ஓட்டும்போதோ செல்போன் உபயோகிக்காதீர்கள்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களை தங்க நேரம் எனப்படும் இக்கட்டான அத்தருணத்தில் உதவுபவர்கள் மீது காவல்துறை எந்த கேள்வியும் கேட்காது, நடவடிக்கையும் எடுக்காது.